# <u>நெல்லிக்குப்பம் நகராட்சி</u>

## <u>நகர் மன்றக் கூட்டம் நிகழ்ச்சி நிரல்</u>

2020–ம் ஆண்டு மே மாதம் 29–ம் தேதி (29.05.2020) வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணிக்கு நெல்லிக்குப்பம் நகராட்சி ஆணையர் அறையில் நடைபெற உள்ள நகர் மன்றத்தின் சாதாரண கூட்டத்தில் முடிவு செய்யப்படவுள்ள மன்றப்பொருள்கள் விபரம்.

முன்னிலை : – திரு. எஸ்.பிரபாகரன்
தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி

**மன்றபொருள் .1.** நெல்லிக்குப்பம் நகராட்சியில் அம்மா உணவகத்தின் மூலம் கொரோனா–19 நோய் தடுப்பு ஊரடங்கு 144 தடை உத்திரவு நீட்டிப்பு செய்யப்பட்டுள்ள 04.05.2020 முதல் 17.05.2020 காலத்தில், ஆதரவற்றோர், ஏழை எளிய மக்கள்,ஊனமுற்றோர்,வீடில்லாதோர், அனைவருக்கும் தமிழக முதல்வரின் உத்திரவின் படி தினமும் மூன்று வேலையும் உணவு சுகாதார முறையில் தயார் செய்யப்பட்டு விநியோகிக்கப்படவேண்டும்.

இந்நிலையில், அம்மா உணவகத்திற்கு தேவையான அத்தியாவசிய மளிகை பொருட்கள் இருப்பு இல்லாத காரணத்தால், ஏற்கனவே வாங்கி வரும் கடலூர் சரவண பவ கூட்டுறவு அங்காடியில் தேவையான பொருட்கள் வாங்க சென்ற போது கொரோனா–19 ஊரடங்கு தடைகாலமாக உள்ளதால், தேவையான மளிகை பொருட்கள்வழங்கிட போதிய இருப்பு இல்லை என தெரிவித்துவிட்டனர். எனவே நெல்லிக்குப்பம் நகராட்சியில் ‘‘அம்மா உணவகம்’’ மூலம் மூன்று வேலையும் உணவு வழங்க வேண்டியுள்ளதால் நோய் தடுப்பு கருத்தில் கொண்டு அவசர அவசியம் கருதி, கடலூர் சரவண பவ கூட்டுறவு அங்காடியில் இது நாள் வரையில் பெறப்பட்ட பொருட்களின் விலை விகிதத்திலேயே உள்ளூர் (S.D.சண்முக செட்டியார் பண்ரூட்டி) அங்காடியில் தமிழ்நாடு நகராட்சிகளின் மாவட்ட சட்டம்–1920 பிரிவு – 15ன் கீழ் தேவையான அத்தியாவசிய மளிகை பொருட்களை வாங்கி உபயோகப்படுத்திட அதற்கான செலவினம் ரூ.2,48,619/– மேற்கொண்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலவலகக் குறிப்பு :- மன்றம் பதிவு செய்யலாம்

**ந.க.எண் :1512/2014/இ2**

**தீர்மான எண் : 061 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .**

**மன்றபொருள்.2.** நெல்லிக்குப்பம் நகராட்சி கணினி பிரிவு ,பொதுப்பிரிவு , பொது சுகாதார பிரிவு, பொறியியல் பிரிவு, நகரமைப்பு பிரிவு , கணினி வரி வசூல் மையம் , சமுதாய அமைப்பாளர் , நகர மன்ற தலைவர் மற்றும் ஆணையாளர் மேஜைகளில் உள்ள கணினி , கணினி அச்சிடும் கருவிகள் மற்றும் கணினி சார்ந்த கருவிகளில் அவ்வப்போது ஏற்படும் பழுதுகளை நீக்குதல் , Antivirus மென் பொருள் நிறுவுதல் , கணினி அச்சிடும் கருவிகளுக்கு தேவையான டோனர் (கணினி எழுது பொருள்) வாங்குதல் மற்றும் டோனர் மை நிரப்புதல் போன்ற பழுது நீக்குதல் பணி மற்றும் பராமரிப்பு பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு 11.06.2018 அன்று ராஜ் கம்பியூட்டர்ஸ் , நெ.1, தௌத் நகர் , செம்மண்டலம் , கடலூர் அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டு 04.05.2020ல் பணி முடிவுற்றது. தற்போது **கொரோனா தொற்று நோய்** உலகம் முழுவதும் பரவியுள்ளதால் அதனால் **ஊரடங்கு** பிறபிக்கப்பட்டுள்ளதாலும் ஒப்பந்தப்புள்ளி கோர முடியாத காரணத்தாலும் மேலும் ஒப்பந்தப்புள்ளி கோர கால தாமதம் ஆகும் என்பதாலும் நகராட்சி அலுவலக கணிணி பழுது நீக்கம் அவசர அவசியம் கருதி பழுது நீக்கம் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொண்ட ராஜ் கம்பியூட்டர்ஸ் , நெ.1, தௌத் நகர் , செம்மண்டலம் , கடலூர் அவர்கள் அதே விலை விகிதத்தில் செய்ய சம்மதம் தெரிவித்து கடிதம் கொடுத்ததிற்கிணங்க மேலும் 1ஒரு வருடத்திற்கு தொடர்ந்து (மே–2020 முதல் ஏப்ரல் –2021) கால நீட்டிப்பு செய்யவும் பராமரிப்பு செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியில் மேற்க்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

அலுவலகக்குறிப்பு. 1. அன்றாட அலுவலக பணி , தேர்தல் பணி மற்றும் கொரோனா தொற்று நோய் பணி ஆகியவற்றின் அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

2.தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம் .

(ந.க.எண்.2298/2018/இ1).

**தீர்மான எண் : 062 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள் .3.** இந்நகராட்சியில் துப்புரவு மேற்பார்வையாளராக பணிபுரிந்து வந்த திரு. எஸ். சங்கர், என்பவர் 31.03.2020 அன்று ஓய்வு பெற்றுள்ளார், அவரது ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதித் தொகை (SPF) மற்றும் அதற்கான வட்டி தொகையினை வழங்குமாறு கோரியுள்ளார்.

அன்னாரின் விண்ணப்பம் உரிய பதிவேடுகள் மற்றும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டதில் கீழ்கண்டுள்ள விவரப்படி திரு. எஸ். சங்கர், துப்புரவு மேற்பார்வையாளர் கணக்கில் உள்ள தொகையினை வழங்கப்பட வேண்டியுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | பணியில் சேர்ந்து 1985–1996 முதல் சிறப்பு சேமநலநிதி பிடித்தம் செய்யப்பட்ட நாள் | 9.05.1985/1996 |
| 2 | ஓய்வுபெற்ற நாள் | 31.03.2020 |
| 3 | சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை பிடித்தம் செய்த தவணைகள் | 148 தவணைகள் |
| 4 | சிறப்பு சேமநல நிதி கடைசியாக பிடித்தம் செய்யப்பட்ட மாதம் | 1996 |
| 5 | சிறப்பு சேமநல நிதி சந்தா தொகை பிடித்தம் செய்த தொகை | ரூ.2960/- |
| 6 | 09.05.1995 முதல் 31.03.2020 முடிய கணக்கிடப்பட்ட வட்டித்தொகை (கணக்கீட்டுத்தாள் இணைக்கப்பட்டுள்ளது) | ரூ.34972/- |
| 7 | நகராட்சி (அரசு) பங்குத் தொகை | ரூ. 10000/– |
| | **மொத்தம்** | ரூ.47932/- |

எனவே மேற்கண்டுள்ள விபரப்படி திரு. எஸ். சங்கர், துப்புரவு மேற்பார்வையாளர் ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்ட சிறப்பு சேமநலநிதி சந்தா தொகை ரூ. 2,960/– ம் அதற்குண்டான வட்டித்தொகை ரூ. 34,972/– ம் நகராட்சி அரசு பங்கு தொகை ரூ. 10,000/– சேர்த்து மொத்தம் ரூ.47,932 /– வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்

**ந,க, எண். 931/2020/பி2**

**தீர்மான எண் : 063 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .**

**மன்றபொருள் .4.** நெல்லிக்குப்பம் நகராட்சியில் நகர மன்ற தீர்மான எண்.285 நாள்.17.12.2013ன் படி ஜெராக்ஸ் மிஷின் Canon Image Runner 2525 copier அரசு நிர்ணயித்த விலையில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் M/s. Excite Inc, புதுச்சேரியில் புதியதாக வாங்கப்பட்டது. மேற்காணும் அங்கிகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து ஜெராக்ஸ் மிஷினுக்கு M/s. Excite Inc, புதுச்சேரி ஜனவரி 23 , 2020 கடிதத்தின் படி 17.02.2020 முதல் 16.02.2021 வரை பராமரிப்பு செலவினம் ரூ. 8750/–ம் ஐ நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது .

அலுவலக குறிப்பு :– 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பராமரிப்பு பணி மேற்க்கொள்ள நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம் .

**(ந.க.எண்.0228/2020/இ1)**

**தீர்மான எண் : 064 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள் .5.** நெல்லிக்குப்பம் நகராட்சி எல்லைக்குட்பட்ட தெருவிளக்கு பராமரிப்பு பணிகளை தனியார் மூலம் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலக முதன்மை பொறியாளர் , சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.**13899/2016**/D01 நாள் **27/01/2017** ன் படி **14.02.2017** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணி ஒப்படைப்பு செய்யப்பட்டு **20.02.2020** வரை மூன்றாண்டு காலமாக பராமரிப்பு பணி செய்யப்பட்டு வந்துள்ளது . **20.02.2020** அன்றுடன் பணிகாலம் முடிவுற்ற நிலையில் நகராட்சி நிர்வாக ஆணையர் , சென்னை அவர்களிடம் ஒப்பந்தப்புள்ளி கோர Bid Document ஒப்புதல் பெற மூன்று மாதம் கால ஆகும் என்பதால் தற்போது நகராட்சியில் தெரு விளக்குகள் பராமரிப்பு பணி மேற்கொள்ள அவசர அவசியம் கருதி புதிய ஒப்பந்தப்புள்ளி கோரும் வரை மேலும் பிப்ரவரி **– 2020 10** நாட்கள் , மார்ச்**– 2020** , ஏப்ரல் **–2020** மற்றும் மே **– 2020** ஆகிய மூன்று மாதங்களுக்கு ஏற்கனவே பராமரிப்பு பணி மேற்கொண்ட நிறுவனமான ஸ்ரீ மல்லிகா எலக்ட்ரிகல்ஸ் & எலக்ட்ரானிக்ஸ் , No.1, போலிஸ் லைன் , பண்ருட்டி என்ற நிறுவனம் அதே விலைவிகிதத்தில் செய்ய சம்மதம் தெரிவித்து கடிதம் கொடுத்தத்திற்கிணங்க மன்ற தீர்மான எண் **. 031** நாள் **. 28.02.2020**ன் படி மூன்று மாதங்களுக்கு கால நீட்டிப்பு செய்யப்பட்டது **.** தற்போது **கொரோனா தொற்று நோய்** உலகம் முழுவதும் பரவியுள்ளதால் அதனால் **ஊரடங்கு** பிறபிக்கப்பட்டுள்ளதாலும் ஒப்பந்தப்புள்ளி கோர நகராட்சி நிர்வாக ஆணையர் , சென்னை அவர்களிடமிருந்து அனுமதி கிடைக்காததால் பொது மக்கள் நலன் கருதியும் , பணியின் அவசர மற்றும் அவசியம் கருதி மேலும் மூன்று மாதத்திற்கு (ஜுன்**–2020** , ஜுலை**–2020** மற்றும் **–**ஆகஸ்ட்- 2020) அதே ஒப்பந்த நிறுவனம் அதே விலைவிகிதத்தில் செய்ய சம்மதம் தெரிவித்து கடிதம் கொடுத்தத்திற்கிணங்க பராமரிப்பு பணி செய்ய நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.2606/2009/இ1)**

**தீர்மான எண் : 065 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள் .6.** நெல்லிக்குப்பம் நகராட்சிக்கு சொந்தமான TN 31 B 9525 என்ற வண்டிக்கு செல்ப் மோட்டார் மற்றும் டைனமோ மோட்டார் மாற்ற வேண்டும் என இந்நகராட்சி ஒட்டுநர் திரு.கே.முருகன் என்பவர் தெரிவித்துள்ளார். அதன்படி, விலைப்புள்ளி பெறப்பட்டு, அதில் குறைவான விலைப்புள்ளியான ஓம்சக்தி இன்ஜினிரிங் ஒர்க்ஸ், காராமணிக்குப்பம் என்பவர் கொடுத்துள்ளதால், அவரிடமே செல்ப் மோட்டார் மற்றும் டைனமோ மோட்டார் மாற்றப்பட்டது. அதற்கான பட்டியல் தொகை ரூ.**5,900/–** ஆகும். இத்தொகையினை தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் **1920** பிரிவு**–15**ன் கீழ் ஓம்சக்தி இன்ஜினிரிங் ஒர்க்ஸ், காராமணிக்குப்பம் வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம்.

**ந.க.எண்.1030/2020/எச்1**

**தீர்மான எண் : 066 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .**

**மன்றபொருள் .7.** நெல்லிக்குப்பம் நகராட்சி பொது சுகாதாரம் பிரிவு – குப்பை அகற்ற பயன்படுத்தப்படும் டாடா ஏஸ் TN31 AH **6645** வாகனத்தில் **1.** ஆக்ஸ்லேட்டர் கேபிள் வாங்கி மாற்றப்பட்டதற்கு ரூ.**1425/– 2.** பஞ்சர் ஒட்டியதற்கு ரூ.**150/– 3.** இடதுபுறம் அயிட்ராலிக் பொட்டி தண்டவாளம் புதியதாக மாற்றியதற்கு ரூ.**2250/–** ஆக மொத்தம் ரூ.**3,825/–** திரு.கே.ராஜராஜசோழன், டிரைவர் என்பவருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண்.1252/2020/எச்1

**தீர்மான எண் : 067 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள் .8.** நெல்லிக்குப்பம் நகராட்சி பொது சுகாதாரம் பிரிவு – குப்பை அகற்ற பயன்படுத்தப்படும் டாடா ஏஸ் TN31 AH **6645** வாகனத்தில் **1.** இஞ்சின் ஷீட்டர் பிளாக் இரண்டு மாற்றப்பட்டது மற்றும் பிரிங் ஆஞ்சன் பட்டை கிளாம்பு மாற்றப்பட்டதற்கு ரூ.**1300/– 2.** டெம்பரேசர் சார்ஜ் மாற்றியதற்கு ரூ.**350/– 3.**

வலதுபுறம் அயிட்ராலிக் பொட்டி தண்டவாளம் புதியதாக மாற்றியதற்கு ரூ.2100/– 4. வாகனத்தின் ஆரன் சரி செய்யப்பட்டதற்கு ரூ.550/– 5. பிரிங்க் பட்டைக்கு கிளாம்பு போல்ட், நெட்டு வாங்கப்பட்டதற்கு ரூ.340/– ஆக மொத்தம் ரூ.4640/– திரு.கே.ராஜராஜசோழன், டிரைவர் என்பவருக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண்.3584/2019/எச்1**

**தீர்மான எண் : 068 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள் .9.** நெல்லிக்குப்பம் நகராட்சி பகுதியில் கொரோனா தொற்று தடுத்திடும் பொருட்டு திரு.மாரிமுத்து, ஒப்பந்ததாரர் என்பவரிடமிருந்து கீழ்கண்ட தேவையான கிருமிநாசினிகள் சப்ளை செய்யப்பட்டது.

1. நீர்த்த சுண்ணாம்பு – 10000 கிலோ
2. பிளீச்சிங் பவுடர் – 5000 கிலோ
3. ஒரு முறை பயன்படுத்தும் மாஸ்க் – 6000 எண்ணிக்கைகள்
4. காட்டன் கையுறை – 2775 எண்ணிக்கைகள்
5. என்.95 முகவுறை – 200 எண்ணிக்கைகள்

அதற்கான பட்டியல் தொகை ரூ.6,38,400/– ஆகும். தொற்றுநோய் தடுப்பு பணிக்காக இத்தொகையினை செலவு செய்யப்பட்டது. எனவே தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம்–1920 பிரிவு –15ன் கீழ் இச்செலவினத்தை மன்றத்தின் பார்வைக்கும், பதிவுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு மன்றம் பதிவு செய்யலாம்

**ந.க.எண்.1030/2020/எச்1**

**தீர்மான எண் : 069 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .**

**மன்றபொருள் .10.** நெல்லிக்குப்பம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் விடுபட்ட வீடுகளில் மற்றும் வணிக நிறுவனங்களுக்கு குடிநீர் குழாய் இணைப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் சிறிய மற்றும் நடுத்தர நகர் அபிவிருத்தி திட்டம் சுழற்சி நிதியின் கீழ் ( UIDSSMT – Revolving fund ) ரூ.74.00 இலட்சம் மதிப்பீட்டில் 2077 வீட்டு குடிநீர் குழாய் இணைப்புகள் வழங்க நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்13277/2018/WS.1 நாள் 19.06.2018 ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் மதிப்பீட்டிற்கு தலைமை பொறியாளர் நகராட்சி நிர்வாக ஆணையரகம் சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண் 13277/2018/DO1 நாள் 21.01.2019–ன்படி தொழில் நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணி மேற்கொள்ள 25.02.2019 அன்று பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி நடைபெற்று வரும் இந்நிலையில் நெல்லிக்குப்பம் நகராட்சி குடிநீர் விநியோக உபவிதிகளின்படி கீழ்காணும் விபரப்படி கட்டணம் நிர்ணயம் செய்து கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| வ.எண் | வகை | குடியிருப்பு (ரூபாயில்) | வணிகம் (ரூபாயில்) |
|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 |
| 1 | வைப்புத்தொகை | 3000.00 | 8000.00 |
| 2 | இணைப்பு பொருட்கள் மற்றும் பணியாளர் செலவு | | |
| | அ) தார்சாலை | 3010.00 | 3010.00 |
| | ஆ) சிமெண்ட் சாலை | 3068.00 | 3068.00 |

மேற்காணும் கட்டணங்கள் நிர்ணயம் செய்திடவும் மேற்படி கட்டணத் தொகையினை சமகால தவணைத் தொகைகளில் வீட்டு வரியுடன் சேர்த்து கீழ்காணும் விவரப்படியாக நிர்ணயம் செய்து வசூல் செய்திடவும் மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

| 10 தவணைக்கான மொத்த தொகை | | | |
|---|---|---|---|
| குடியிருப்பு | | வணிகம் | |
| தார்சாலை | சிமெண்ட் சாலை | தார்சாலை | சிமெண்ட் சாலை |
| ரூ.6010.00 | ரூ.6068.00 | ரூ.11010.00 | ரூ.11068.00 |
| ஒரு தவணைக்கான திருப்பி செலுத்த வேண்டிய தொகை | | | |
| குடியிருப்பு | | வணிகம் | |
| தார்சாலை | சிமெண்ட் சாலை | தார்சாலை | சிமெண்ட் சாலை |
| ரூ.601.00 | ரூ.607.00 | ரூ.1101.00 | ரூ.1107.00 |

அலவலகக் குறிப்பு:- மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.2020 /2018 /இ2)
**தீர்மான எண் : 070 அலுவலக குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது .**

**மன்றபொருள் .11.** நெல்லிக்குப்பம் நகராட்சி குடிநீர் நிதியில் நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 15ன் கீழ் அவசர அவசியம் கருதி நகராட்சிக்கு சொந்தமான துப்புரவு பணியாளர் குடியிருப்பில் உள்ள 36 வீடுகளுக்கு தண்ணீர் செல்லும் குழாய்களில் உள்ள அடைப்பு பழுதுகள், பழுதடைந்த வால்வுகளை மாற்றி புதியதாக பொருத்துவதற்கும் மற்றும் புதிய PVC குழாய் மாற்றி அமைத்தற்கு பட்டியல் தொகை ரூ.48000/– திரு.N.சந்திரசேகர் அவர்களுக்கு வழங்கப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கும் , பதிவிற்கும் வைக்கப்படுகிறது.
அலுவலகக்குறிப்பு: மன்றம் பதிவு செய்யலாம் .
**ந.க.எண்.1282/2020/இ1**
**தீர்மான எண் : 071 அலுவலக குறிப்பினை ஏற்று பதிவு செய்யப்பட்டது .**

தனி அலுவலர்,
நெல்லிக்குப்பம் நகராட்சி